முருகப்பெருமான் துணை

**மகான் கருவூர்தேவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.05.2023**, செவ்வாய்கிழமை

1. தவபலமிக்க ஞான தேசிகனே
தருமனே ஆறுமுக அரங்கனே
அவனியில் உன் பெருமை கூறி
அருளுவேன் சோபகிருது விடை திங்கள்

2. திங்களிலே நவதிகதி குசன் வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 09 ம் நாள், 23.05.2023, செவ்வாய்கிழமை)

தேசிகன் கேட்க கருவூர்தேவர்யானும்
ஓங்காரன் வழி உலகம் தேறவே
ஓதிடுவேன் அரங்கன் வழி மக்கள் வர

3. வருகவே மக்களிடை மனபலம்
வடிவேலன் சக்தியாக மாறும்
தருகின்ற தயவு குணநிலைகள்
தக்கபடி தேறி மாற்றம் காணும்

4. காணவே அரங்கன் கரம்பட
கலியுகத்தார் பெறுகின்ற நல்
ஞானதீட்சைகள் அனைத்தும்
ஞானபண்டிதன் சக்தியாக வர

5. வருமுலகில் அரங்கன் தொண்டர்கள்
வல்லமைபட சரவணச் சுடரேற்றி
தருமசேவை ஆற்றிக்கொண்டு
தரணியோர் வழிபாட்டில் வருக

6. வருகவே மக்களுக்குள்திடம்
வரமாகப் பெருகி இனிதே
முருகப் பெருமான் அருள்பட
முழுமையான ஞான வழிகள் ஆகும்

7. ஆகவே எங்கும் எதிலும்
ஆறுமுகனார் வெளிப்பாடுகாண
செகமே ஞானத் தலைமையாக
செப்பிடுவேன் ஆறுமுகனார் ஆளும்

8. ஆளும் ஞான பூமியாக
அரங்கன் சீடர்கள் நிரம்ப
வலுவான ஞான ச்சித்தர்
வளமிக்க காலமாக மாறும்

9. மாறுதலை செய்து முடிக்க
மாதவசி அரங்கன் காட்டும்
ஆறுதல் மிக்க தருமத்தை
அனைவரும் ஏற்று நடத்த

10. நடத்தவே சடுதி மாற்றம்
நம்பிக்கை தரும் வண்ணம்
தடையற அரங்கேறி நின்று
தரும ஞான ஆட்சிதனை

11. ஆட்சிதனை பேருலகமடைந்து
அறிவிப்பேன் மகிழ்ச்சி காணும்
மாட்சிமைபட வளர்ச்சிகாணும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—